

வளமான நாட்டிற்கு ! மக்கள் பங்கேற்பு !!

# " 'பாறு' செழித்தால் பாரும் செழிக்கும் "

## ஒருங்கிணைந்த பாறுக் கழுகுகள் மேம்பாட்டுத் திட்டம்

### ஊரக மக்கள் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு முகாம்
### *Participatory Rural Appraisal and Awareness Campaign*

**இடம்:** மாயாறு & பூதநத்தம். **நாள் :** *07.08.2022*

**அ**ழிவின் விளிம்பிலுள்ள பாறுக் கழுகுகள் *(Vulture)*, புலிகள், கரடிகள், கழுதைப் புலிகள், யானைகள் உள்ளிட்டவை வாழ்ந்து வரும் பகுதியாக நம் ஊர் திகழ்ந்து வருகிறது. பல்வேறு மாற்றங்கள் நம் வாழ்வியலிலும் சுற்றுச்சூழலிலும் ஏற்பட்டு வருகிறது. இதற்கு வரும் தலைமுறையைத் தயார்படுத்தும் நோக்குடனும் மாறிவரும் இயற்கைச் சூழலை மேம்படுத்தும் நோக்குடனும் தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு ஊரக மக்கள் பங்கேற்பு மதிப்பீட்டு முகாம் நடைபெற உள்ளது.

**கா**ட்டுயிர்களும் மக்களும் பல்லாண்டுகாலமாக இணைந்து வாழ்ந்துவரும் சூழலைத் தொடரவும் பாறுக் கழுகுகள் செழித்து வாழ உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் உன்னிச் செடியைக் கட்டுப்படுத்தி மண்ணுக்கேற்ற மரங்களை நடுவதற்கும் புல் விதைகளைத் தூவுவதற்குமான சாத்தியக் கூறுகளை அறியவும் மாறி வரும் சூழலுக்கேற்ப புதிய வாழ்வாதாரங்களை உருவாக்கவும் இந்த மக்கள் பங்கேற்பு நிகழ்வு வழிவகுக்கும். மேலும், கலந்துரையாடலில் புலி தாக்கி இறந்த கால்நடைக்கான இழப்பீடு பெறுவதில் புதிய வழிமுறைகளும் கலந்தாலோசிக்கப்படும்.

**என**வே, நம் ஊரைச் சேர்ந்த வயதான பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் தவறாது கலந்துகொண்டு, கலந்தாய்வு செய்து, பத்தாண்டிற்கான செயல் திட்டம் தீட்ட உதவுமாறு வேண்டுகிறோம்.

**ஊரக மக்கள் பங்கேற்பு முகாமின் நோக்கம்:**

**1.** கிராம மக்களின் பங்கேற்பு முகாம் ஓர் இரு வழிக் கல்வி பயிற்சித் திட்டமாகும். இதன் மூலம், கிராம மக்கள் தங்கள் பகுதியின் சமுகப்-பொருளாதாரக் கல்வி, சுற்றுச்சூழல் மற்றும் பண்பாடு தற்போதைய நிலைமைகளை அறிந்துகொள்வதோடு திட்டச் செயலாக்கத்திற்கு உதவ முடிகிறது.

**2.** பாறுக் கழுகு மேலாண்மைத் திட்டத்திலும் உன்னிச் செடியைக் கட்டுப்படுத்துவதிலும் திட்டமிடுதல்.

**3.** மக்களை ஒருங்கிணைத்துச் செயல் திட்டங்களில் ஈடுபடச் செய்தல்.

**4.** கிராமத்தின் உண்மையான நிலைமையையும் பிரச்சனைகளையும் அறிதல்.

**5.** மாறிவரும் காலநிலை மாற்றத்திற்கேற்ப வாழும் பகுதியின் சூழலை மேம்படுத்தும் வழிகளையும் மக்களை ஆயத்தப்படுத்தும் வழிகளையும் ஆராய்தல்.

## இணைந்து செயல்படுவோம் !!

அருளகம்
ARULAGAM

**திட்டச் செயலாக்கம்**
**அருளகம்**
**4/347, என்.ஜி.ஜி.ஓ. காலணி**
**துடியலூர் - 641 022**
**arulagamgreen@gmail.com**
**98432 11772**
**90477 25651**

**திட்ட ஒருங்கிணைப்பு**

Rotary
ESRAG
ENVIRONMENTAL SUSTAINABILITY ROTARY ACTION GROUP